முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் காசிபர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.03.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **வரம் தரும் சக்தியாக வந்த**
**வாழும் ஞானியே அரங்கா**
**அறம் வழி சமூக மாற்றத்தை**
**ஆற்றலாய் செய்து வருகின்ற தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் **விளம்பி சால் திங்கள்**
**ஆசிபட இருபானாற் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிற்றுக்கிழமை)**
அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
3. ஆசியை காசிபர் யானும்
அருளுவேன் உலகோர் நலமுற
நேசகரம் கொண்டு உலகோர்
ஞானதேசிகனார் தருமநெறியை
4. நெறியை ஏற்று வருதல் காண
நிலவுலகினில் தரும பலமிக்கவர்கள்
அறிவுமிக்க ஆன்றோர் ஆர்வலர்கள்
அரசியல் சேவைக்கு முன்வந்து
5. முன்வந்து ஆளுமை மாற்றம்
முருகப்பெருமான் ஆளுமையாக
நன்மை தரும் வண்ணம் மாற்றம்
ஞானிகள் ஆட்சியாக மாறும்
6. மாறவே மாதவ பலனாக
மாதருமத்தை உருவாக்கி செய்யும்
தேறவுண்டான மக்கள் சேவையில்
தேடி இணையும் மக்களெல்லாம்
7. மக்களெல்லாம் ஆறுமுகப்பெருமான்
மார்க்கமான ஞானவழி வருவதுடன்
தேக்கமிலா தேர்ச்சி நிலை கண்டு
திருவருளை குருவருள்பட அடைவர்
8. அடைவதுடன் அரங்கன் வந்த
ஆன்மீக ஞானயுக ஆட்சியில்
தடையற பதவி சுகம் யோகம்
தனித்துவம் பெற்று சிறப்பர்
9. சிறப்பு தரும் அரங்கா வாழ்க
செயம் தரும் அரசா வாழ்க
மறுப்பின்றி உன்னை தொடரும்
மாதருமம் கொண்ட தொண்டர் படைகளே

10. படைகளே உலகை வெல்லும்
படைகளே ஞானஆட்சி தரும்
சோடை நீங்கி எங்கும் எதிலும்
சுபிட்சம் காண வேண்டுமா மக்களே

11. மக்களே துறையூர் எல்லையாம்
மாதவ சக்திமிக்க பிரணவக்குடிலை
ஊக்கமுடன் தொடர்ந்து வருக
உலகமே ஞானயுக மாற்றம் பெறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் காசிபர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

துன்பப்படுகின்ற கலியுகமக்களை மீட்க வரம் தந்தருளும் மகா சக்தியாக இவ்வுலகினில் முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்துள்ள கலியுக வாழும் ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அறத்தின் மூலமாக சமூக மாற்றத்தினை மிகப்பெரும் ஆற்றலுடன் செய்து வருகின்ற ஞானதேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே காசிபர் யானுமே உரைக்கின்றேன் என்கிறார் மகான் காசிபர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உரைத்திட்ட தருமநெறிக் கொள்கைகளை உலகோர் மனம் விரும்பி ஏற்றுக் கொண்டு தர்மங்கள் செய்து கடைப்பிடித்து வரவர, இவ்வுலகினில் தருமபலம் மிக்கவர்கள் எல்லாம் அறிவுமிக்க ஆன்றோர்கள் எல்லாம் உலக நலன் கருதி அரசியல் சேவைக்கு தாமாக முன்வந்து தொண்டுகள் செய்திட இவ்வுலகினில் ஆளுமை மாற்றம் உண்டாகி உலகினில் முருகப்பெருமானின் ஆட்சியாக நன்மை அளிக்கும் வகையில் உலகினில் ஆட்சி மாற்றம் உண்டாகி உலகினில் ஞானஆட்சியாக மாறிடும் உலகமே ஞானஆட்சியாக மாறிடும்.

இவ்வுலகம் ஞானஆட்சியாக மாறிடவே மாதவபலனாக உலகமெலாம் மகாதர்மங்களை உண்டாக்கி மக்களெல்லாம் கடைத்தேற்றம் அடைவதற்கு உண்டான மக்கள் சேவையில் உலக மக்களும் இணைந்து ஆறுமுகப்பெருமான் உலகிற்கு உண்டாக்கி தந்திட்ட மார்க்கமான ஞானநெறிகளை ஏற்று கடைப்பிடித்து வந்து தடையின்றி ஞானவழிகளில் தேர்ச்சி பெற்று இறைவனது அருளாம் திருவருளை குருஅருளாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளால் அடைந்து சிறப்படைவார்கள்.

அவர்களெல்லாம் ஆறுமுக அரங்கன் அமைக்கும் ஞானயுக ஆட்சியில் தடையேதும் இன்றி பதவி சுகங்களையும் யோகமான வாழ்வினையும் பெற்று தனித்துவமான சிறப்பான நிலைகளை அடைந்து சிறப்படைவார்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. வெற்றிகளை தந்தருளும் ஞானஅரசனே வாழ்க வாழ்க. மறுப்பேதும் இன்றி உண்மையுடன் அரங்கா உம்மை தொடர்ந்து வருகின்ற மாதருமப் பலம் கொண்ட தொண்டர் படைகளே இவ்வுலகை வென்றிடும் சிறப்பு பெற்ற படைகளாகும். அரங்கனின் தொண்டர் படைகளே இவ்வுலகை வென்றிடும் சிறப்பு பெற்ற படைகளாகும். அரங்கனின் தொண்டர் படைகளே இவ்வுலகை வெல்லும் அற்புத படைகளாகும். அரங்கனின் தொண்டர் படைகளே இவ்வுலகினில் ஞானஆட்சி தருகின்ற படைகளாகும். உலகின் குற்றங்களை போக்கி எங்கும் எதிலும் சுபிட்சம் காண வேண்டுமாயின் மக்களே ஞானபூமியாம் துறையூர் எல்லையில் உள்ள மகா ஞானபீடமாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடிச் சென்று பயபக்தி பணிவுடன் பணிந்து வணங்கி ஊக்கமுடன் அரங்கனை பின்தொடர்ந்து தூயநெறியில் வரவர, இந்த கலியுகமே மாறி ஞானயுக மாற்றமாக மாற்றம் பெறும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் காசிபர்.

–சுபம்–